# மாலைமணி பி.எஸ்.இளங்கோ

37-வது ஆண்டு நினைவு நாள்

11.8.1989



ஏங்கள் இதயத்தை விட்டு நீங்காது
என்றென்றும் எங்களது நினைவில் வாழ்ந்து வரும்

## இதய தெய்வத்திற்கு அஞ்சலி!

மகன்: சித்தார்த் இளங்கோ
மனைவி. சகுந்தலா இளங்கோ
மகள்கள்: திருமதி. தமிழ்ச்செல்வி
திருமதி. மணிமேகலை
திருமதி. எழில் திரு. பழனியப்பா
மருமகன்கள்: திரு. பாண்டியன்
திரு. சுதாகர்
மருமகள்: தாட்சாயினி சித்தார்த்
பேரன்கள்: வருண்ராஜ், ஷருண்ராஜ், முகில், தர்ஷன், மெளரியன்
மற்றும் அலுவலக நண்பர்கள்

# சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதி - வட்டக் கழக நிர்வாகிகளுடன் சந்திப்பு!

## மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!



சேலம் மத்திய மாவட்ட கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் இரா.இராஜேந்திரன் கீழ்க்கண்ட தேதிகளில் சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிக் கழகங்களில் வட்டக் கழகம் வாரியாக கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகளை சந்திக்கவுள்ளார்கள். எனவே இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட, மாநகர, வட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி வட்டக் கழகம் வாரியாக கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் சந்திப்பு**

**நாள் : 12.08.2026 புதன்கிழமை**
**பிற்பகல் - கொண்டலாம்பட்டி பகுதி**

| | | | |
|---|---|---|---|
| 1. | 54வது வட்டம் | 03.00 மணி | S.R.S மண்டபம், அருணாசலம் மெயின்ரோடு, தாதகாப்பட்டி |
| 2. | 59வது வட்டம் | 04.00 மணி | பாலமுருகன் திருமணமண்டபம், பெருமாள் கோவில்மேடு |
| 3. | 60வது வட்டம் | 05.00 மணி | அவைத்தலைவர் சதாசிவம் வீடு |
| 4. | 50வது வட்டம் | 06.00 மணி | முருகன் கோவில் திருமண மண்டபம், குமார் மட்டன் கடை அருகில் |

**நாள் : 13.08.2026 வியாழக்கிழமை**
**பிற்பகல் - அன்னதானப்பட்டி பகுதி**

| | | | |
|---|---|---|---|
| 5. | 52வது வட்டம் | 03.00 மணி | வட்ட செயலாளர் அலுவலகம், காந்திநகர். |
| 6. | 51வது வட்டம் | 04.00 மணி | Login Sports Academy மைதானம் |
| 7. | 48வது வட்டம் | 05.00 மணி | கிரிக்கெட் மைதானம், தொல்காப்பியர் தெரு, |
| 8. | 49வது வட்டம் | 06.00 மணி | அகர மஹால், அன்னதானப்பட்டி |

**நாள் : 14.08.2026 வெள்ளிக்கிழமை**
**பிற்பகல் - குகை பகுதி**

| | | | |
|---|---|---|---|
| 9. | 45வது வட்டம் | 03.00 மணி | மாரியம்மன் கோவில் திடல், காந்தி நகர் |
| 10. | 46வது வட்டம் | 04.00 மணி | ரமணி சுப்ரமணிமஹால், குகை |
| 11. | 47வது வட்டம் | 05.00 மணி | சமுதாய கூடம் அம்பேத்கர் தெரு |
| 12. | 53வது வட்டம் | 06.00 மணி | N.S.R திருமண மண்டபம், லைன்மேடு |

**நாள் : 15.08.2026 சனிக்கிழமை**
**பிற்பகல் - அம்மாபேட்டை பகுதி**

| | | | |
|---|---|---|---|
| 13. | 36 & 37&38 வது வட்டம் | 03.00 மணி | செட்டிக்கார மண்டபம், இராமநாதபுரம் |
| 14. | 39வது வட்டம் | 04.00 மணி | நாயுடு சமூக கூடம், பெரியகிணறு தெரு |
| 15. | 40வது வட்டம் | 05.00 மணி | A.M.ஹால், பலபட்டறை மாரியம்மன் கோவில் அருகில் |

**நாள் : 16.08.2026 ஞாயிற்றுக்கிழமை**
**முற்பகல் - கிச்சிப்பாளையம் பகுதி**

| | | | |
|---|---|---|---|
| 16. | 41வது வட்டம் | 09.00 மணி | நதிமுல்லாகான் மண்டபம் |
| 17. | 42வது வட்டம் | 10.00 மணி | மகேந்திர சமூக சேவை மண்டபம், சன்னியாசிகுண்டு ரோடு |
| 18. | 43வது வட்டம் | 11.00 மணி | தனசிவா மண்டபம் |
| 19. | 44வது வட்டம் | 12.00 மணி | சமுதாய கூடம் |

**பிற்பகல் - கருங்கல்பட்டி பகுதி**

| | | | |
|---|---|---|---|
| 20. | 56வது வட்டம் | 03.00 மணி | இராமச்சந்திரா மண்டபம் |
| 21. | 57வது வட்டம் | 04.00 மணி | சைனீகர் மண்டபம் |
| 22. | 55வது வட்டம் | 05.00 மணி | குளாளர் மண்டபம் |
| 23. | 58வது வட்டம் | 06.00 மணி | கோபால் கார் ஷெட், அம்மாள் ஏரி ரோடு |

**இரா.இராஜேந்திரன்,**
செயலாளர்,
சேலம் மத்திய மாவட்ட தி.மு.க.

புதுச்சேரியில் – ஒன்றிய அமைச்சர் அமித்ஷா பங்கேற்பு நிகழ்வில்

# தமிழ்த்தாய் வாழ்த்து பாடாமல் புறக்கணிப்பு!

## மாநிலக் கழக அமைப்பாளர் இரா.சிவா கண்டனம்!



புதுச்சேரி, ஆக. 11 –

புதுச்சேரி காவல்துறைக்கு குடியரசுத் தலைவரின் 'கலர்ஸ்' விருது வழங்கும் நிகழ்ச்சியில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பங்கேற்ற நிலையில், தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படாததற்கு தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மக்களின் உணர்வுகளோடு தொடர்புடைய தமிழ்த்தாய் வாழ்த்தை நிகழ்ச்சியில் பாடாமல் புறக்கணித்திருப்பது கண்டனத்திற்குரியது என்று தெரிவித்துள்ளார்.

மேலும், நிகழ்ச்சியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காவலர்கள் நீண்ட நேரம் பணியில் ஈடுபடுத்தப்பட்டதன் காரணமாக மயங்கி விழுந்த சம்பவம் குறித்தும் அவர் கவலை தெரிவித்துள்ளார். காவலர்களின் உடல்நலம் மற்றும் பணிச் சூழல் குறித்து உரிய கவனம் செலுத்தியிருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஒன்றிய உள்துறை அமைச்சர் பங்கேற்ற நிகழ்ச்சியை முன்னிட்டு புதுச்சேரியில் சாலைப் போக்குவரத்தில் ஏற்பட்ட குளறுபடிகளால் பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளானதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கான முன்னேற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்படாததாலும், அது குறித்து பொது மக்களுக்கு போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தாததும், கடும் போக்குவரத்து நெரிசலில் மக்கள் பாதிக்கப்பட்டனர் என்று அவர் வேதனை தெரிவித்துள்ளார்.

மேலும், ஆளுநர் பதவியின் அரசியலமைப்புச் சார்பின்மை குறித்த கேள்வியையும் எழுப்பியுள்ள அவர், பா.ஜ.க. சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆளுநர் பங்கேற்றிருப்பது ஏற்புடையதல்ல என்றும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மக்களின் உணர்வுகளையும், காவலர்களின் நலனையும், பொது மக்களின் அன்றாடப் போக்குவரத்தையும் கருத்தில் கொண்டு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா வலியுறுத்தியுள்ளார்

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மயிலை ஆ. சந்திரன்

**ஆகஸ்ட் 11 (1996)**



இளவயது முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் பகுதி பிரதிநிதியாகவும் – தென்சென்னை மாவட்டத்தில், வட்டக் கழகச் செயலாளர், மயிலை பகுதிக் கழகச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



தேனி மாவட்டம் கம்பம் நகராட்சி பகுதிகளில் பருவமழையை முன்னிட்டு நடைபெற்று வரும் ஓடைகள் தூர்வாரும் பணிகளை கம்பம் நகர மன்றத் தலைவர் வனிதா நெப்போலியன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து துரிதமாக அகற்றிட வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். ஆய்வின் போது நகராட்சி அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்டம் தச்சநல்லூர் வடக்கு பகுதி பொறுப்பாளர் டாக்டர்.சங்கர் ஏற்பாட்டில் தச்சநல்லூர் சிவன் கோவில் வளாகத்தில் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் எஸ்.வி.சுரேஷ் பங்கேற்று உணவு வழங்கினார்.நிகழ்வில் சடாமுனி,பிரேம் கணேசன்,ராஜா, தராசு சுப்பிரமணியன்,தங்கவேல், அருணா,கிருஷ்ணகுமார், காந்திமதிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.